**செய்தி வெளியீடு எண்:628** **நாள்: 23.09.2017**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்</u>**
**<u>திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின்</u>**
**<u>எம்.ஜி.ஆர். நூற்றாண்டுவிழா உரை – கிருஷ்ணகிரி ( 23.9.2017)</u>**

ஏழரை கோடி தமிழ் நெஞ்சங்களிலே வீற்று,
ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தின் உயிர்மூச்சாக விளங்கிய
இந்த மண்ணிலே மறைந்தாலும், நம் இதயங்களிலே
வாழ்ந்து கொண்டிருக்கின்ற
இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா
தெய்வத்தை வணங்கி,
உழைப்பால் உயர்ந்த உன்னத தலைவர்,
பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின்
பகுத்தறிவு சீடன்,

அறிஞர் அண்ணா அவர்களின் இதயக் கனி,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
அரசியல் ஆசான்,

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர்,
ஏழைகளின் இதய தெய்வம்
மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில்
கலந்து கொண்டு உங்களையெல்லாம்
சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும்,
பெருமையும் அடைகிறேன்.

இந்த இனிய விழாவில், தலைமையேற்று தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **தனபால்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே சிறப்பான கருத்துக்களைவழங்கிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

இந்த இனிய விழாவில் சிறப்பாக உரையாற்றி,
இந்த மாவட்ட மக்களுக்குத் தேவையான நீர் கிடைக்க
வழிவகை செய்ய வேண்டுமென்று குரல் கொடுத்த

மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!

முன்னிலையுரை ஆற்றி, என்னென்ன திட்டங்கள் இந்த மாவட்டத்திற்கு
தேவை என்று கோடிட்டுக்காட்டிய
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. **பாலகிருஷ்ணா ரெட்டி** அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் வரவேற்புரையாற்றிய
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை தலைமைச் செயலாளர்
திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப. அவர்களே,
அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய
கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **கே. அசோக்குமார்** அவர்களே!
ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர்
திருமதி. **மனோரஞ்சிதம்** அவர்களே!
பர்கூர் சட்டமன்ற உறுப்பினர்
திரு. **சி.வி. ராஜேந்திரன்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி
**பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **சி. கதிரவன்** அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
தலைமைக் கழக நிர்வாகிகளே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்குபெற்று, சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
முன்னாள் அமைச்சர், இந்த மாவட்டத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய
திரு.கே.பி.முனுசாமி அவர்களே

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
நலத்திட்டப் பயனாளிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

கிருஷ்ண தேவராயரின் ஆட்சியின் கீழ்
இருந்ததால் இது கிருஷ்ணகிரி
என அழைக்கப்படுவதாக கருதுவர்.
'கிரி' என்றால் மலை எனப் பொருளாகும்.
கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்ட
கிருஷ்ணகிரி கோட்டை
பல போர்களைக் கண்ட கோட்டையாகும்.

இன்றைக்கும் இந்த கோட்டை கொத்தளம்
வலுவாகவும், வடிவாகவும் உள்ளது.
இந்திய தொல்லியல் துறையால்
பராமரிக்கப்படும் பாதுகாக்கப்பட்ட
நினைவுச் சின்னமாக இருக்கிறது.

1824 –ஆம் ஆண்டு, ஆயிரத்து 642 ஏக்கர்
பரப்பளவில் ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்ட
**குதிரை வளர்ப்பு மையம்**
இன்று ஆசியாவில் உள்ள பெரிய கால்நடை பண்ணைகளில் ஒன்றாக
மாறியிருக்கிறது.

அழகான குன்றுகள், மலைகள், குளுமையும்
பசுமையும், இயற்கை சூழலும் நிறைந்த
**'தளி'** என்ற ஊரை ஆங்கிலேயர்கள்
**'குட்டி இங்கிலாந்து'** என்று அழைத்தது

**கிருஷ்ணகிரிக்கு கிடைத்த பெருமையாகும்.**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்கள் தருமபுரி மாவட்டத்தைப் பிரித்து,
2000–ஆம் ஆண்டு கிருஷ்ணகிரியை தலைமையிடமாகக் கொண்டு
புதிய மாவட்டத்தை உருவாக்கி இந்த மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தவர்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களால் 1992 – ஆம் ஆண்டு
உருவாக்கப்பட்ட சிப்காட் தொழில் வளாகம்
மற்றும் சிட்கோ தொழிற் பேட்டைகளும்,
டி.வி.எஸ், அசோக் லேலண்டு,
டைட்டன் போன்ற பெரிய தனியார்
தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ள
ஓசூர் நகரம் சிறந்த தொழில் நகரமாக
வளர்ச்சியடைந்துள்ளது.

கடந்த 2014 –ஆம் ஆண்டு
சூளகிரி வட்டத்தில் இரண்டு சிப்காட்
தொழில் வளாகங்கள்
துவங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களால் ஆணையிடப்பட்டு
தற்போது நில எடுப்புப் பணிகள்
நடைபெற்று வருகின்றன.

ஓசூர் அருகே புதிய விமான நிலையம் அமைக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன, விரைவாக இந்த சேவை தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்கள் 1991 –ஆம் ஆண்டு முதல் 1996 –ஆம் ஆண்டு வரையிலான
காலகட்டத்தில்
பர்கூர் சட்டமன்ற உறுப்பினராக
தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சராக
பணியாற்றிய போது போச்சம்பள்ளி தாலுக்காவை உருவாக்கினார்கள். மேலும்
ஐ.ஆர்.டி. தொழில்நுட்பக் கல்லூரி,
கனிம ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை,
கூட்டுறவு தொழிற் பயிற்சி நிலையம்,
அரசு பொறியியல் கல்லூரி,
மகளிர் அரசு கலைக் கல்லூரி
ஆகிய பல்வேறு திட்டங்களை கொண்டுவந்து இந்தப் பகுதிக்கு பெருமை

சேர்த்தவர் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அகில இந்திய மாங்கனி கண்காட்சி
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களின் ஆட்சியில் 1993– ஆம்
ஆண்டு துவக்கப்பட்டு, ஜுன், ஜுலை
மாதங்களில் நடைபெறும்
**கிருஷ்ணகிரி மாம்பழத்திருவிழா மிகவும்** பிரபலமானது.

கிருஷ்ணகிரி பாகலூரில் உள்ள
ரோஜா தோட்டங்களிலிருந்து பெறப்படும்
ரோஜா மலர்கள் உள்நாடு மற்றும்
வெளிநாடுகளுக்கு பெருமளவில்
ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மழைநீரை சேமிக்கும் நெடுங்கல் நீர்த்தேக்கம்,
ராம நாயக்கன் ஏரி, பாரூர் ஏரி
உள்ளிட்ட ஏரிகளும்,
தென்பெண்ணையாறு, மார்கண்டேய ஆறு
போன்ற ஆறுகளும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயத்தை செழிக்க வைக்கின்றன.

கிருஷ்ணகிரி, ஓசூரில் அமைந்துள்ள
சந்திரசூடேஸ்வரர் கோயில்
2500 ஆண்டுகள் பழமைவாய்ந்த
காட்டு வீர ஆஞ்சநேயர் திருக்கோயில்,
500 ஆண்டுகள் பழமையும் பெருமையும்
வாய்ந்த தேன்கனிக்கோட்டை
**பேட்ராய சுவாமி திருக்கோயில்,**
போன்ற திருத்தலங்களையுடைய
புனித மண் கிருஷ்ணகிரியாகும்.

சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலும்,
தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சருமான மூதறிஞர் ராஜாஜி அவர்கள்
இந்த மாவட்டத்திலுள்ள
தொரப்பள்ளி என்ற ஊரில் பிறந்தவர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் எப்போதும்
உழைப்பாளர் பெருமக்களின்
வியர்வையில் நனைந்து கொண்டிருக்கின்ற பூமி.
உழைக்கும் மனிதனையும்,

உழைப்பாளர்கள் நிறைந்த ஊர்களையும்,
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.

நாளை உலகை ஆள வேண்டும்
உழைக்கும் கரங்களே என்றும்

உடல் உழைக்கச் சொல்வேன் – அதில்
பிழைக்கச் சொல்வேன் என்றும்,

உழைத்து வாழ வேண்டும் – பிறர்
உழைப்பில் வாழந்திடாதே

என்று உழைப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும்
வகையில் தனது பல படங்களில் உழைப்பின்
மேன்மையை குறிப்பிட்டவர் மாண்புமிகு
புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி. ஆர் அவர்கள்.

அந்த வகையில் மனித ஆற்றல் மிக்க
கிருஷ்ணகிரி மாவட்டத்தை
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்கள் அதிகம் விரும்பியதில்
எந்த ஆச்சரியமும் இல்லை.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
உழைப்பின் அருமையும் பெருமையும்
உணர்ந்தவர்கள். காரணம், தான் ஒரு பணக்கார குடும்பத்தில் நீதிபதியின்
ஐந்தாவது மகனாகப் பிறந்தாலும் சூழ்நிலை சரியில்லாத காரணத்தால்
ஏழையாக வறுமையில் தான் வளர்ந்திருக்கிறார்கள்.

ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளான
உண்ண உணவு, உடுக்க உடை,
இருக்க இருப்பிடம் இவை மூன்றையும் ...
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
தன் இளமையில் தன்னிறைவாகப் பெற
கடுமையாக உழைக்க வேண்டியதாயிற்று.

இலங்கையில் தந்தையையும்,
கூடப்பிறந்த 2 சகோதரிகளையும்,
ஒரு சகோதரனையும் இழந்து,
மீதியிருந்த ஒரே சகோதரரான
திரு.எம்.ஜி. சக்கரபாணியுடனும்,

தாயுடனும்  மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்தார்கள்.

தன்னை நம்பி வந்தவர்களை தமிழ் நாடு என்றைக்குமே ஏமாற்றியது கிடையாது.
இன்றைக்கு மட்டுமல்ல, பழங்காலத்திலியிருந்தே
தமிழர்கள் தன்னை நம்பியவர்களை
வரவேற்று உபசரித்து வாழவைப்பவர்கள்
என்பதை நமது தமிழ் இலக்கியங்கள்
படம் பிடித்துக் காட்டுகின்றன.

அதனால்தான், உழைக்கும் மனிதர்கள்,
உண்மையான மனிதர்கள்,
வாழத்தகுந்த உன்னத மாநிலமாக
அன்றிலிருந்து இன்றுவரை
தமிழ் நாடு விளங்கி வருகிறது.

**‘உயர்ந்த கல்வி கற்கும் போதே,**
**உழைக்கும் கல்வியையும்**
**மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை நன்கு அமையும்’**
என்ற வாழ்க்கைத் தத்துவத்தை
கூறியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் திரைத்துறையில்
கடுமையாக உழைத்து முன்னேறிக் கொண்டிருக்கின்ற நேரத்தில்
நடந்த ஒரு நிகழ்வை
இங்கே நினைவுகூற விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
கொல்கத்தாவிற்கு படப்பிடிப்பிற்கு சென்றிருந்தார்கள்.
படப்பிடிப்பு இல்லாத நாட்களில் தன் வீரத்தைக் காட்ட
அகலமான சாக்கடைகளைத் தாண்டி சாகசம் செய்த போது ஒரு கால் செருப்பு அறுந்து விட்டது.
உடனே மற்றொரு கால் செருப்பையும்
தூக்கி எறிந்து விட்டு வெறுங்காலோடு
நடந்து கொண்டிருந்தார்கள்.

மறுநாள்  படப்பிடிப்புக்கு
புதுச் செருப்பு வேண்டுமென்று  அன்று மாலை

திரு.கலைவாணர் அவர்களிடம்
மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் கேட்டார்கள்.

திரு. கலைவாணர் அவர்கள் ஒரு பொட்டலத்தை
எடுத்து மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்களிடம் நீட்டினார்கள்.

அதில் திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் காலையில்
தூக்கி எறிந்த செருப்பு தைக்கப்பட்டு
பாலிஷ் போட்டு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து
திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

**“நீ இன்னும் பெரிய நடிகன் ஆகவில்லை
அதனால், காசை வீணாக்காதே !
உன் அம்மா உன்னை பெரும் கஷ்டப்பட்டு வளர்க்கிறாள்”** என்று திரு. எம்.ஜி.ஆர் அவர்களுக்கு
திரு. கலைவாணர் அவர்கள் அறிவுரை சொன்னார்கள்.

தான் ஒரு ஆரம்பகால நடிகனாக
இருந்தபோது மாற்று செருப்புகூட இல்லாமல்,
அனுபவித்த துன்பத்தின் வலியை
எப்போதும் நினைவில் வைத்திருந்த
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனக்கு ஏற்பட்ட
இந்தத் துயரத் வேறு எவருக்கும் ஏற்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

பிற்காலத்தில் இலவச காலனி திட்டத்தை கொண்டு வந்து ஏழை எளிய மக்களின் கஷ்டத்தை போக்கியவர் புரட்சித்தலைவர் அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்
இளம் வயதில் தன் தாயுடன் பட்ட கஷ்டங்களை பின்னாளில் நினைவுகூர்ந்து,
தான் முதலமைச்சராக இருக்கும்போது
அதற்கேற்றவாறு மக்கள் நலதிட்டங்களை செயல்படுத்தினார்கள். அதற்கு
உதாரணமாக அவரது வாழ்வில் நடைபெற்ற ஒரு நிகழ்வை
இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மக்கள் திலகம் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் விழுப்புரம் வழியாக
காரில் சென்று கொண்டிருக்கும் போது
திடீரென ஒரு பெட்ரோல் பங்க் அருகில்
காரை நிறுத்தச் சொல்கிறார்.

தன் உதவியாளரை அழைத்து
"இடதுபுறமாக இருபது கடை தாண்டி
ஒரு பாட்டி வடை சுட்டுக் கொண்டிருப்பார்,
அவரிடம் வடை வாங்கிக் கொண்டு
காரில் ஏறும் போது,
அந்தப் பாட்டியின் கையில்
ரூபாயை கொடுக்காமல்
அங்கு  வடை வைத்திருக்கும் கல்லாவில்
போட்டுவிட்டு வந்துவிடு''
என்று கூறினார்கள்.

அந்த உதவியாளரும் அப்படியே செய்தார்.
தனக்கு திடீரென இருநூறு ரூபாய் கிடைத்ததும்
வடை சுடும் பாட்டி திகைத்தார்,
அதைக் கண்ட நம் வள்ளல்
புன்முறுவல் பூத்தார்'',
காரும் புறப்பட்டு சென்று விட்டது.

உதவியாளர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களிடம் ஏன் அந்தப்பாட்டிக்கு
200 ரூபாய் கொடுத்தீர்கள்?
என வியப்புடன் கேட்க,

அதற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்,
''அந்த 200 ரூபாய் வடைக்கு இல்லை,
அந்தப் பாட்டியோட தன்னம்பிக்கைக்கும்,
தளராத முயற்சிக்கும்,
இந்த வயதில் சுயமாக உழைச்சுப் பிழைக்கிற
அந்த வயதான தாயை கௌரவிக்கவும்
ஆசைப்பட்டேன் , அதற்காகத்தான்'' என்றார்.

இப்படியே ஒவ்வொரு முறை விழுப்புரத்தை
தாண்டும் பொழுதும் வடை வாங்குவதும்
200 ரூபாய் போடுவதும் ஒரு வழக்கமாகவே
இருந்து வந்தது. இந்த மாயாஜால வித்தையால்
குழம்பிய பாட்டி யார் மூலம்
பணம் வருகிறது என்பதைக் கண்டறிய எண்ணினார்.

ஒருநாள், இதே போல் உதவியாளர்
பாட்டியிடம் வடை வாங்கி பணத்தைப்

போட முயற்சித்த போது பாட்டி
அந்த இருப்பிடத்தில் இல்லாததைப் பார்த்துத் திடுக்கிட்டு சுற்று முற்றும் பார்த்தார்.

அங்கே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை
காரில் பார்த்து அடையாளம் கண்டு கொண்ட
அந்த மூதாட்டி கண்ணீர் மல்க,
"என் மகராசா!
நீங்களா இத்தன வருசமா
இந்த ரோட்டோரமா நான் சுட்ட வடையை
விரும்பி சாப்பிட்டீங்க?

தினம் தினம் ஆயிரம் குடும்பங்களுக்கு
படியளக்கிற மகாராசா,
நான்  சுட்ட வடையை
நீங்க சாப்பிட்டதற்கு
நான் கோடிப் புண்ணியம் செய்திருக்கணும்.

ஆனா நீங்க லாட்டரி சீட்டுல பணம் விழுற
மாதிரி ஒவ்வொரு முறையும்
200 ரூபாய் கொடுத்தது எனக்கு
தர்மச் சங்கடமாயிருக்கு  மகாராசா, என்றார்.

அதற்கு வள்ளல் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள்
"நான் உங்களுக்கு கொடுத்ததை
உங்க மகன் கொடுத்ததா நினைச்சுக்குங்க,
சீக்கிரமா நான் அரசாங்கத்திடம் சொல்லி
இதே பணத்தை மாசாமாசம்
உங்களுக்கு பென்சனா தரச் சொல்றேன்"
என்று சொல்லி விடை பெற்றார்.

தனது வாக்குறுதிக்கேற்ப
தான் முதலமைச்சரான பிறகு
முதியோர் பென்சன் திட்டத்தை அமலாக்கி
அதன் மூலம் மாத உதவித் தொகை,
நாள் தோறும் மதிய உணவு,
ஆண்டிற்கு இரு முறை இலவச உடை
ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி
வரலாறு படைத்தார் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

இப்படி மக்களின் குறைகளைப் பார்த்துப் பார்த்து திட்டங்களை செயல்படுத்தி பொற்கால ஆட்சி தந்தவர்தான் நம் பொன்மனச் செம்மல்.

இத்தகைய மகத்தான தலைவரை
தமிழ் நாடு பெற்றதற்கும்
அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவதிலும் தமிழராகிய நாம் பெருமை கொள்ள வேண்டும்.

அத்தகைய மாபெரும் தலைவரின்
வழியில் வந்த மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,
ஏழைகளின் வாழ்வாதாரத்தை
உயர்த்துவதற்காகத் திட்டங்கள் தீட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் இந்த அரசும் அந்தந்த
மாவட்ட மக்களுக்கு ஏற்றாற்போல்
திட்டங்கள் வகுத்து செயல்படுத்தி வருகிறது.

அம்மாவினுடைய அரசு கடந்த ஆறு ஆண்டுகளில்
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செய்த சாதனைகளை சொல்வதென்றால் நாட்கள் போதாது.

ஆயினும், நேரம் கருதி ஒரு சிலவற்றை பற்றி மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய 89 கோடியே 6 லட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 13 ஆயிரத்து 859 விவசாயிகள் இந்த மாவட்டத்தில் பயன் பெற்றனர்.

மகசூல் பாதித்த 66 ஆயிரத்து 111 விவசாயிகளுக்கு,
17 கோடியே 42 லட்சம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.
முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 65 ஆயிரத்து 207 விவசாயிகளுக்கு 81 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணினிகள்
வழங்கும் திட்டத்தின் கீழ்
123 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 79ஆயிரத்து 575 மடிக்கணிகள் இந்த மாவட்ட மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சரின்

பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ்
194 கோடியே 13 லட்சம் ரூபாய் செலவில்
சூரிய மின் சக்தியுடன் கூடிய
11 ஆயிரத்து 485 பசுமை வீடுகள் இந்த மாவட்டத்தில்
கட்டி வழங்கப்பட்டுள்ளன.

தாய் திட்டத்தின் கீழ் 155 கோடியே
07 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
10 ஆயிரத்து 253 பணிகள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டத்தின் கீழ்
194 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
15 ஆயிரத்து 920 வீடுகள்
கட்டித் தரப்பட்டுள்ளன.

ஒசூர் பகுதியில்
8 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
அரசு கலைக் கல்லூரி
ஒன்று துவக்கப்பட்டுள்ளது,

ஊத்தங்கரை மற்றும் கெலமங்கலம்
பகுதிகளில் பல்வகை தொழில் நுட்பக்
கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

குடிமராமத்து பணிகள் திட்டத்தின் கீழ்
3 கோடியே 80 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் 27 பணிகள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஐந்தாண்டுகளில்
23 மின் திட்டங்கள் மற்றும் புதிய மின்பாதை,
மின் இணைப்பு வழங்கும் திட்டங்கள்
248 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின் கீழ்
கிருஷ்ணகிரி மாவட்டத்தில்
386 கோடி ரூபாய் செலவில்
1117.9 கி.மீ நீள சாலை பணிகள் முடிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் 63 கோடியே 91 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் 17 பாலங்கள்,
சாலை பணிகள், சிறு பால பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 20 கோடி ரூபாய் மதிப்பில்
புதியதாக தாய் சேய் நல பிரிவு தொடங்குதல்,
ஓசூர் அரசு மருத்துவமனைக்கு
1 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
சி.டி.ஸ்கேன் கருவி வழங்குதல்,

ஓசூர் அரசு மருத்துவமனையில்
மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை
பராமரிப்பு மையத்தில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அறுவை அரங்கம் அமைத்தல் உட்பட 25 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில்
பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று நான் 66 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 441 பணிகளை தொடங்கி வைத்துள்ளேன்.

தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின்
சார்பில் 182 கோடியே 39 லட்சம் ரூபாய்
செலவில் கட்டப்பட உள்ள மின் நிலையங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்
மூலம் 92 கோடியே 21 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ள
திட்டங்கள் உட்பட327 கோடியே 14 லட்சம்
ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு
அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மேலும், 33 ஆயிரத்து 131 பயனாளிகளுக்கு
65 கோடியே 75 லட்சம் ரூபாய்
மதிப்பிலான நல திட்ட உதவிகளை வழங்கியுள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து
இன்று வரை மாநிலம் முழுவதும்
நிறைவடைந்த 8 ஆயிரத்து 312 கோடியே
99 லட்சம் ரூபாய் மதிப்பிலான 33 ஆயிரத்து
589 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும்,

3 ஆயிரத்து 130 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரத்து 555 பணிகளுக்கு
அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம் 11 ஆயிரத்து 443 கோடியே
95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான
40 ஆயிரத்து 144 பணிகள்
செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் பொன்முடி இந்த ஆட்சியில் என்ன திட்டங்கள் கொண்டு வந்தீர்கள் என்று கேள்வி கேட்டார்கள். நான் செய்த அத்தனை திட்டங்களையும் பட்டியலிட்டு, இந்த மாவட்டத்திற்கு மட்டும் நான் சொல்லியிருக்கின்றேன். எனவே, எதிர்க்கட்சித்தலைவர் நாங்கள் என்னென்ன திட்டங்கள் கொண்டு வந்துள்ளோம் என்று தெரிந்து கொண்டு பேசவேண்டும். ஆகவே, வேண்டுமென்றே, ஏதாவதொரு பிரச்சினையை தூண்டி அதன் மூலம் ஆதாயம் பார்க்கப் பார்க்கின்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விழிப்போடு இருக்கின்றது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய துணிவோடு செயல்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டாலும் அம்மாவினுடைய அரசை அசைக்க முடியாது. இந்த அரசு நாட்டு மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற அரசு.

இப்படி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. ஆற்று நீரோட்டம்போல் தங்கு தடையில்லாமல் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது அதை பாழ்படுத்தும் விதமாக சிலர் மக்கள் விரோத போக்கை கடைபிடிக்கிறார்கள்.
சூழ்ச்சியின் மூலம் அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார்கள், எப்போதும் எடுபடாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். தங்குதடையில்லாமல் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது, அதைப் பாழ்படுத்தும்விதமாக, சிலர் மக்கள் விரோதப் போக்கை கடைபிடிக்கின்றார்கள். சூழ்ச்சிகள் அரசியல் ஆதாயம் பெற முயற்சிப்பது எடுபடாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதை கூறுகின்றபோது எனக்கு கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு காட்டில் ஓநாய் ஒன்று
தனக்கு எடுபிடியாக இருக்கும்
நரியை அழைத்து,
‘எனக்கு உடல்நிலை சரியில்லை,
இன்று என்னால் அலைந்து திரிந்து
உணவு தேட முடியாது.
ஏதாவது உணவு கொண்டு வா’ என்றது.

நரி கிராமத்து எல்லைக்கு சென்றது.
அங்கே நாட்டு எருது ஒன்று
மறைந்து நின்று கொண்டிருந்தது.
'மாமா, வணக்கம்,
ஏன் இங்கே மறைந்திருக்கிறீர்கள்'?
என்று கேட்டுக் கொண்டே
நரி எருதிடம் சென்றது.

அதற்கு அந்த எருது,
**"எனது எஜமான் சுமையை
வண்டியில் ஏற்றி ஓட்டுகின்றான்.
என் ஜோடி எருது அங்கு இருக்கிறது
என்னை காணாமல் அவன் திண்டாடட்டும்
என்று இங்கே ஒளிந்து கொண்டிருக்கிறேன்"**
என்று எருது சோகத்துடன் கூறியது.

**"ஊரெல்லாம் தேடி முடிச்சிட்டு,
கழுதை கெட்டால் குட்டிச் சுவர்
என்று இங்கே வந்து உன்னை
இழுத்து போய் விடுவான்"** என்றது நரி,

**" அப்படியென்றால் நான் தப்பிக்கவே
முடியாதா? "** என்று கேட்டது எருது.

**"ஏன் முடியாது?,
என்னோடு காட்டிற்குள் வா,
நிறைய புல் வளர்ந்து கிடக்கிறது.
வேலையே செய்யாமல்
தீனி சாப்பிட்டு புஷ்டியாக இருக்கலாம்'**
என்று நரி எருதுக்கு ஆசை காட்டியது.

"காட்டில் சிங்கம் புலியெல்லாம் இருக்கும்,
ஓநாய் பார்த்தால் கடித்து குதறிவிடும்
என்பார்களே, அங்கே வந்தால்
எனக்கு ஆபத்தில்லையா? " என்றது எருது.

"காட்டு மிருகங்களை
நீ பார்த்திருக்கிறாயா? " என்றது நரி

**"நான் இந்த கிராமத்தையே**

**தாண்டியது கிடையாது’’** என்றது எருது.

**‘‘உன்னைப் போன்ற எருதுகள் தான்**
**காட்டில் திமுதிமுவென்று வளர்ந்திருக்கின்றன.**
**உன்னைப் பார்த்தால் தான்**
**மற்ற விலங்குகளுக்கு பயம்**’’**,** என்றது நரி.

நரி கூறியவற்றை நம்பிய எருது
நரியோடு காட்டுக்குச் சென்றது.

நரி ஓநாயிடம் ஜாடை காட்டியது.
ஓநாய் எருது மேல் வேகமாகப் பாய்ந்து குதறியது.

எருதை மீண்டு எழாதவாறு
காயப்படுத்திவிட்டு நரியிடம்,

**‘‘எருதைப் பத்திரமாக பார்த்துக்கொள்.**
**குளித்துவிட்டு வந்து விருந்து உண்கின்றேன்’’**
என்று சொல்லி ஓநாய்
பக்கத்திலிருந்த ஆற்றுக்கு
குளிக்கப் புறப்பட்டது.

நரிக்கு நாக்கு நமநமத்ததாலும்,
ஓநாய் குளித்துவிட்டு வந்துவிட்டால்
எருதின் மூளை பாகம் தனக்கு கிடைக்காது
என்பதால், ஓநாய் வருவதற்குல்
எருதின் மூளையைத் தின்று விட்டது.

நீராடி வந்த ஓநாய்,
**‘நீ எருதின் மூளையை ஏன் தின்றாய்?’**
எனக் கேட்டது.

**‘மூளையிருந்தால் இந்த எருது**
**என்னை நம்பி என் பின்னால் வருமா?**
**அதான் மூளை இருக்கிறதா**
**என்று பார்த்தேன். நான் யூகித்தது சரிதான்**
**அதற்கு மூளையில்லை’** என்றது நரி,

அதை அந்த ஓநாய் நம்பியது,

நரி தான் விரும்பியதை அடைந்து விட்டோம்
என்ற திருப்தியில், ஏப்பம் விட்டபடியே
அந்த இடத்தை விட்டு அகன்றது.

இப்படித்தான் பலபேர் அந்த ஓநாய்
மற்றும் நரியைப் போல
ஆசை வார்த்தைகாட்டி
அழைத்துவரச் சொல்லி,
கடைசியில் அவர்களை
அழித்து விடுகிறார்கள்,

எனவே, நீங்கள் யாருடைய
வார்த்தை ஜாலங்களையும்,
ஆசை வார்த்தைகளையும்
நம்பி பலியாகிவிடாதீர்கள்.

உங்களுக்குத் தகுந்த இடம் இதுதான்,
நம்பிக்கையோடு இருங்கள். நீங்கள் எண்ணியது அத்தனையும் நிறைவேறும்
என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

குடிமராமத்து என்னும் திட்டம் விவசாயிகளின் கனவு திட்டம். இந்த திட்டத்தை நிறைவேற்றுகின்றவிதமாக அம்மாவினுடைய அரசு விவசாயிகள் அரசு என்பதற்காக, விவசாயிகளுக்கு தேவைப்படுகின்ற வண்டல் மண்ணை, ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகளில் இருந்து அள்ளிக்கொள்ளலாம் என்ற ஆணையை வெளியிட்டது. அதன்படி, விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் பகுதியில் இலவசமாக வண்டல் மண்ணை அள்ளி, நிலத்திற்கு எருவாகவும், அடிஉரமாகவும் இட்டு, விவசாயிகள் மகிழ்ச்சியடையக்கூடிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு மக்களவைத் துணைத்தலைவர் அவர்களுடைய கோரிக்கையின்படி, நீர்வளம் காக்க மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மூன்றாண்டுகளில் 1000 கோடி ரூபாய் திட்டத்தில் தடுப்பணை கட்டப்படுமென்ற அறிவிப்பை தந்த அரசு என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர கடமைப்பட்டிருக்கின்றேன். இத்திட்டத்தின் மூலம் ஆறுகள், ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்படும். இந்த ஆண்டு ரூபாய் 350 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டுவதற்கு அரசு திட்டமிட்டிருக்கின்றது. ஆகவே, மீதமுள்ள ரூபாய் 650 கோடியை எஞ்சிய இரண்டாண்டுகளில் கட்டப்பட்டு, ஒரு சொட்டுகூட வீணாகாமல், பாசனத்திற்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான

செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரு மனிதனுக்கு உயிர் எப்படியோ, அப்படி விவசாயிகளுக்கு நீர் உயிராக தேவைப்படுகின்றது. அந்த நீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன். விவசாயம், தொழில் வளம் இரண்டும் சேர்ந்த மாவட்டம் இந்த கிருஷ்ணகிரி மாவட்டம்.

தமிழகத்தில், இன்றைக்கு பருவமழை பொய்த்துவிட்டதன் காரணமாக, 140 ஆண்டுகாலம் இல்லாத கடுமையான வறட்சி நிலவி வருகிறது. இதனால் அணைகள், ஏரிகள், குளங்களிலே போதிய நீர் இல்லை. குடிப்பதற்குக்கூட நீர் இல்லை. அதற்காக அரசு, போர்க்கால நடவடிக்கையில், ரூபாய் 500 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து முதற்கட்டப் பணிகள் துவங்கப்பட்டது. குடிநீர் பிரச்சினை இல்லாமல் தகுந்த ஏற்பாடுகளை விரைந்து செய்து பார்த்துக் கொண்டது அம்மாவினுடைய அரசு.

இன்றைக்கு கல்வியிலே ஒரு புரட்சியை புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டமாகையால், விவசாயிகளின் குழந்தைகளுக்கு நல்ல கல்வி அறிவு கிடைத்து, அவர்கள் சிறந்த கல்வியாளர்களாக விளங்க வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. இந்த ஆறாண்டுகளில் மட்டும் 41,727 ஆசிரியர்கள், 58 சிறப்பாசிரியர்கள், 4,362 ஆய்வக உதவியாளர்கள், 15,169 பகுதிநேர ஆசிரியர்கள் பணியிடத்தை நியமித்து கல்வியில் ஒரு புரட்சி, மறுமலர்ச்சி ஏற்படுத்திய அரசு அம்மாவினுடைய அரசு.

நம்முடைய கிராமத்தில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு சிறந்த கல்வி கிடைக்க, புதிய, புதிய பள்ளிகளை ஏற்படுத்தி, மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசால் 227 புதிய தொடக்கப்பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. 116 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இப்படி பல்வேறு நலத்திட்டங்கள், பள்ளி மாணவர்களுக்கு அளித்ததன் விளைவாக, தொடக்க நிலை கல்வியில் மாணவர் சேர்க்கை 99.85 விழுக்காடாகவும், நடுநிலை கல்வியில் மாணவர் சேர்க்கை 99.20 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது.

அதேபோல அம்மா வழியிலே செயல்படும் அம்மாவினுடைய அரசும் 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்து, ஏழை, எளிய, சமூகத்திலே பொருளாதாரத்தில் பின்தங்கிய வசதியில்லாத குடும்ப மாணவ, மாணவிகள்

குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி கற்பதற்கு சிறந்த வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில்தான், மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, சட்டக்கல்லூரி உருவாக்கி மாணவச் செல்வங்கள் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது.

அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக 2011–ல் பதவியேற்றபொழுது, உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை 100–க்கு 21 சதவீதம் தான் இருந்தது. மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் தான் உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே புரட்சி நடவடிக்கை, எண்ணற்ற திட்டங்கள் கொடுத்ததன் விளைவு செய்த காரணத்தினால், 2016–ஆம் ஆண்டு உயர்கல்வி சேர்க்கை விகிதம் 44.32 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. 100–க்கு 21 பேர் படித்த எண்ணிக்கை, 44 ஆக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அம்மா அவர்கள் கல்வியிலே கவனம் செலுத்தியிக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல, இன்றைக்கு நம்முடைய பாடத்திட்டத்திலே மாற்றம் கொண்டு வரவேண்டும் என்பதற்காக 2018–2019 கல்வியாண்டிலே 1ம் வகுப்பு, 6ம் வகுப்பு, 9ம் வகுப்பு, 11 ஆம் வகுப்பிலும், 2019–2020 கல்வியாண்டிலே 2, 7, 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளும், 2020–2021 ஆம் கல்வியாண்டிலே, 3, 4, 5 மற்றும் 8ம் வகுப்பிலும் பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டு, சிறந்த மாணவர்களாக அம்மாவினுடைய அரசு உருவாக்கிக் காட்டும் என்பதைத் தெவித்துக் கொள்கிறேன்.

2011–2012–ஆம் ஆண்டில் இரண்டாம் பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், 2011–ஆம் ஆண்டு முதல் 2016–ஆம் ஆண்டு வரை, நான்கு முறை, 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக உணவு தானியம் உற்பத்தி செய்து தமிழ்நாடு உயரிய சாதனை படைத்துள்ளது. இதற்கென மத்திய அரசிடமிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழகம் நான்கு முறை "கிருஷி கர்மான்" விருதினை பெற்றுள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து முதன்முறையாக தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தான் உலக முதலீட்டாளர் மாநாடு 2015–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. இதில் 1200 வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், 5000 இந்தியப்

பிரதிநிதிகளும் பங்கேற்றனர். 76 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் நேரடி மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மீதமுள்ள ஒப்பந்தங்களை துரிதப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொழில் துறையில் ஒரு நாடு முன்னேற வித்திட்ட, அடித்தளமாக விளங்கிய முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான். தமிழகத்திலே ஒரு தொழிற்சாலை நகரம் உருவாக்குவதற்கு இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுப்பதன் மூலமாக இப்படிப்பட்ட தொழிற்சாலை நம்முடைய மாநிலத்திற்கு கிடைத்தது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்திலே திமுக ஆட்சி நடைபெற்றது, எதையுமே செய்யவில்லை. மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே 1996 முதல் 2014 வரை ஆட்சி அதிகாரத்திலே இருந்தார்கள். திமுக காங்கிரஸ் ஆட்சியிலும், பாரதீய ஜனதா ஆட்சியிலும் பங்கு பெற்றார்கள். அப்பொழுதெல்லாம் தமிழ்நாட்டைப் பற்றி கவலைப்படாமல் இருந்தார்கள். அவர்கள் குடும்பத்தைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள், எந்த இலாகாவை வாங்கலாம், மகனுக்கு வாங்கலாமா ? பேரனுக்கு வாங்கலாமா ? இதுதான் அவர்கள் மனதிலே இருந்தது. ஆனால், தமிழ்நாட்டு மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் குறிப்பிட்டதைப் போல நீண்டகாலமாக இருந்த காவிரி நதிநீர் பிரச்சினை. மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இருந்தபொழுதே இதை வலியுறுத்தியிருந்தால், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டிருக்கும்.

ஆகவே, இருக்கின்றபொழுது என்ன சாதித்தோம் என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய லட்சியம் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தான், சாதாரண தொண்டனும் கூட உயர்ந்த நிலைமைக்கு வரமுடியும் என்று மக்களவை துணை சபாநாயகர் தெரிவித்தார். அது உண்மை. வேறு எந்த ஆட்சியிலும் வரமுடியாது. திமுக வில் வாரிசு அரசியல் தான் இருக்கும். அப்பா மாவட்ட செயலாளராக இருப்பார், மகன் சட்டமன்ற உறுப்பினராக வரமுடியும், மற்ற கட்சிகளிலெல்லாம் மிராஸ்தார், தொழிலதிபர்கள் தான் சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் வரமுடியும், அமைச்சராக முடியும். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தான் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய ஆட்சிக்காலத்திலும் சரி, புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலும் சரி, இந்த இயக்கத்திற்கு விசுவாசமாக, உண்மையாக உழைக்கின்ற சாதாரண தொண்டன் கூட உயர்ந்த பதவிக்கு வரமுடியும் என்ற நிலை அண்ணாதிராவிட முன்னேற்றக் கழக கட்சியில் தான் இருக்கிறது

என்பது நிரூபித்துக் காட்டிய இயக்கம். இந்த இயக்கத்தை அழித்துவிடுவோம் என்று சிலபேர் எண்ணுகிறார்கள், இந்த இயக்கம் ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் கட்டப்பட்ட எஃகு கோட்டை. இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் கட்டப்பட்ட எஃகு கோட்டையில் மோதினால் மோதுகின்ற தலைதான் உடையுமே தவிர, கோட்டையை என்றைக்கும் உடைக்கமுடியாது. அதேபோல, இன்னும் சிலபேர் இந்த ஆட்சியை சதி செய்து கவிழ்த்துவிடலாம் என்று சிலர் வஞ்சக எண்ணத்தோடு எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஒருபோதும் நடக்காது. ஏனென்று சொன்னால், இந்த அரசு மக்களுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிற அரசு, மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற எண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசு. ஆகவே, இந்த அரசை நீங்கள் எந்தகாலத்தில் அசைக்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சி தான் நிறைய திட்டங்களை கொடுத்திருக்கிறோம். இன்றும் ஒரு சிலர் ஏதாவது குழப்பத்தை உருவாக்கி, அந்தக் குழப்பத்தின் வாயிலாக அரசுக்கு நெருக்கடி உருவாக்க வேண்டுமென்று திட்டமிட்டு சதிசெய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆட்சியிலே சட்டம், ஒழுங்கு சீர்கெட்டிருப்பதாக சொல்கின்றார்கள். இவர்கள் ஏதாவது பேராட்டத்தை அவிழ்த்து விட்டுவிட்டு, அதில் ஏதாவது பிரச்சினை வெடித்து இந்த அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்பத்தி அதன் விளைவாக ஏதாவது பிரச்சினை உருவாகுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள், ஒருபோதும் நடக்காது. ஏனென்றால், மக்கள் அம்மாவினுடைய அரசு பக்கம் இருக்கின்றார்கள், மக்கள் இந்த அரசை அரணாக இருந்து பாதுகாத்துக் கொண்டிக்கும் வரை நீங்கள் இந்த அரசு ஒன்றும் தொட்டுக்கூட பார்க்க முடியாது. ஆகவே, உங்கள் எண்ணமெல்லாம் பகல் கனவாகத்தான் இருக்கும், கானல் நீராகத்தான் இருக்கும். எனவே, நீங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கையை நீங்கள் தருவீர்களானால், நிச்சயமாக அம்மாவினுடைய அரசு துணை நிற்கும். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய கனவை அம்மா அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். அம்மா விட்டுச் சென்ற பணியை அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செய்து சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது.

இங்கே நம்முடைய மாவட்ட அமைச்சர் அவர்களும், உங்களுடைய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் முன்னோடி கழக நிர்வாகிகளும் பல்வேறு கோரிக்கைகளை என்னிடத்திலே கொடுத்தார்கள். அந்த கோரிக்கையில் ஒரு சிலவற்றை அரசு நிறைவேற்றுகின்ற அறிவிப்பை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

**கிருஷ்ணகிரி மாவட்டம் – அறிவிப்புகள்**

**அலியாளம் அணைக்கட்டு வலதுபுறக் கால்வாய் நீட்டிப்பு செய்தல்**

1. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அலியாளம் பகுதியில் ஒரு அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டிலிருந்து ஏற்கனவே ஒரு வலதுபுறக் கால்வாயானது 8960 மீட்டர் தொலைவிற்கு கட்டப்பட்டுள்ளது. இதில் 8800 மீட்டர் தொலைவிலிருந்து புதியதாக 19.85 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிரதான கால்வாயும், 1.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு கிளைக்கால்வாய் அமைக்கப்பட்டு, வெள்ளக் காலங்களில் வரக்கூடிய உபரி நீர் ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டங்களில் உள்ள 12 ஏரிகளுக்கும், மேலும் தர்மபுரி மாவட்ட மக்கள் வேண்டுகோளினை ஏற்று அங்கு உள்ள தூள்செட்டி ஏரிக்கு நீர் கொண்டு செல்ல வழிவகை செய்யப்படுகிறது. இதன் மூலம் 869 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். இந்தப்பணி உடனடியாகச் செயல்படுத்தப்படும்.

   அதேபோல, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலக்கட்டத்திலே என்னைகொல்புதூர் கால்வாய் வெட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். அம்மாவினுடைய ஆட்சியிலே முதற்கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

**அரசம்பட்டி மற்றும் பெண்டரஅள்ளியில் தடுப்பணைகள்**

2. கிருஷ்ணகிரி மாவட்டம் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அரசம்பட்டி மற்றும் பெண்டரஅள்ளி ஆகிய இரு இடங்களில் தடுப்பணைகள் கட்டித் தரப்படும்.

**கொடியாளம் அணைக்கட்டிலிருந்து 25 ஏரிகளுக்கு மின்விசைப்பம்பு மூலம் நீரேற்றம் செய்ய ஆய்வு மேற்கொள்ளுதல்**

3. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், பெண்ணையாற்றின் குறுக்கே கொடியாளம் பகுதியில் ஏற்கனவே ஒரு அணைக்கட்டு உள்ளது. இந்த அணைக்கட்டின் அருகே ஒரு கிணறு அமைத்து அதிலிருந்து மின் விசை பம்ப் மூலம் குழாய் வழியாக நீரேற்று முறையில் சுமார் 25 ஏரிகளுக்கு நீரினைக் கொண்டு செல்வதற்காக உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு நிலத்தடி நீர் செறிவூட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**புதிய நீர்வரத்து கால்வாய் அமைக்க ஆய்வு**

4. கிருஷ்ணகிரி மாவட்டம் தாமோதரஉறள்ளி ஊராட்சி சந்தனூர் ஏரியிலிருந்து பாப்பாரப்பட்டி ஊராட்சி கொட்டாவூர் ஏரிக்கு புதியதாக நீர்வரத்து கால்வாய் அமைக்கவும் மேலும் கும்பாரஉறள்ளி ஊராட்சி பச்சனம்பட்டி ஏரியிலிருந்து பட்டகரஉறள்ளி ஏரிக்கு புதியதாக நீர்வரத்து கால்வாய் அமைக்கவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**பொதுப்பணித்துறைக்கு புதிய அலுவலகங்கள்**

5. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு, கிருஷ்ணகிரியை தலைமை இடமாகக் கொண்டு ஒரு புதிய கட்டட (கட்டடம் மற்றும் பராமரிப்பு) கோட்டம் உருவாக்கப்படும்.

**சூளகிரி புறவழிச்சாலை**

6. சூளகிரி நகருக்கு புறவழிச்சாலை அமைக்கப்படும். இப்புறவழிச்சாலைக்கு 4 லட்சம் ரூபாய் செலவில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

**தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாத்தகோட்டா சாலையில் உயர்மட்ட பாலம்**

7. வி.சி.சி சாலை முதல் பாத்தகோட்டா சாலை கி.மீ.2/6ல் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் 3 கோடியே 65 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

**ஒசூர் நகருக்கு வெளிவட்ட சாலைக்கான நில எடுப்பு பணி**

8. ஒசூர் நகருக்கு வெளிவட்ட சாலை அமைக்க 145 கோடி ரூபாய்க்கு நில எடுப்பு பணி மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**தளி சாலையில் ரயில்வே மேம்பாலம் அமைக்க திட்ட அறிக்கை**

9. ஒசூர் மற்றும் ஆனைக்கல் ரயில் நிலையங்களுக்கு இடையில் தளி சாலையில் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**நாட்றாம்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்**

10. கிருஷ்ணகிரி மாவட்டம் தளி ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள நாட்றாம்பாளையம் கிராமம் மலைப்பகுதியில் அமைந்துள்ளதால் பொதுமக்கள்

தற்போது சுகாதாரத் தேவை பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அப்பகுதி மக்கள் நலன் கருதி நாட்றாம்பாளையம் கிராமத்தில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

**புதிய துணை இயக்குநர் (குடும்பநலம்) அலுவலகம்**

**11.** கிருஷ்ணகிரி மாவட்டம் பிரிந்த பிறகும் சுகாதாரத்துறை குடும்ப நல துணை இயக்குநர் அலுவலகமானது தொடர்ந்து தருமபுரியிலேயே இயங்கி வருகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு என தனியாக ஒரு துணை இயக்குநர் (குடும்ப நலம்) அலுவலகம் அமைக்கப்படும்.

**ஓசூர் நகரம் அருகே வர்த்தக ஊக்குவிப்பு மையம்**

**12.** கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் நகரமானது வளர்ந்து வரக்கூடிய ஒரு தொழில் நகரமாகும். இங்கு ஆட்டோமொபைல் உற்பத்தி தொழிற்சாலைகள், எலக்ட்ரானிக்ஸ் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், விமான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியன செயல்பட்டு வருகின்றன. இத்துடன் கிரானைட் மெருகூட்டும் தொழிலும் உலக அளவில் பெருமைப்படத்தக்க வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும் கொய் மலர், பட்டு, மாங்கூழ் போன்ற பல விவசாயம் சார்ந்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழில்களும் சிறப்பாக செயல்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டு ஓசூர் – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் சூலகிரி அருகே சிட்கோ மற்றும் தொழில் மற்றும் வர்த்தக சங்கங்கள் ஒருங்கிணைந்து ஒரு வர்த்தக ஊக்குவிப்பு மையம் செயல்படுத்தப்படும்.

**ஓசூரை மாநகராட்சியாக தரம் உயர்த்துதல்**

**13.** கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் நகராட்சி கடந்த 2012ம் ஆண்டு முதல் சிறப்புநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகரமயமாக்குதல் காரணமாக ஓசூர் நகராட்சியை ஒட்டியுள்ள அச்செட்டிபள்ளி, பேகேப்பள்ளி, சென்ன சந்திரம், கொத்தகொண்டப்பள்ளி, நல்லூர், ஒன்னல்வாடி, தொரப்பள்ளி அக்ரஉறாரம், பேரண்டப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகளை சேர்த்து ஓசூர் நகராட்சியை, மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும். இதனால் இப்பகுதி மக்களுக்கான அடிப்படை கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.

**கிருஷ்ணகிரியை சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துதல்**

**14.** கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நகராட்சியானது கடந்த 1984ம் ஆண்டு முதல் முதல்நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போது கிருஷ்ணகிரி நகராட்சிக்கு அருகிலுள்ள வெங்கடாபுரம், அகசிப்பள்ளி, தேவசமுத்திரம், காட்டிநாயனப்பள்ளி, கட்டிகானப்பள்ளி,

பெத்தனப்பள்ளி, கள்ளகுறிச்சி மற்றும் பையனப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகளை கிருஷ்ணகிரி நகராட்சியுடன் இணைத்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய குடிநீர் திட்டம்**

**15.** கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 6 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 425 குடியிருப்புகளுக்கு முழுமையாக குடிநீர் வழங்கும்பொருட்டு, தென்பெண்ணை ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும். இதனால் 2 லட்சத்து 42 ஆயிரத்து 668 பேர் நிரந்தர பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஓசூர் விளையாட்டு அரங்கிற்கு கூடுதல் விளையாட்டு அரங்கங்கள்**

**16.** கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் விளையாட்டு அரங்கம் விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்கள் நலன் கருதி, தற்போது 400 மீட்டர் தடகள ஓடு பாதை, கால்பந்து மைதானம், கையுந்து பந்து ஆடுகளம், கபாடி ஆடுகளம் மற்றும் கோ–கோ ஆடுகளம் ஆகிய கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இவ்விளையாட்டு அரங்கில், கூடுதலாக ஒரு கூடைப்பந்து ஆடுகளம், இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கம், நடைபாதை மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைத்துத் தரப்படும்.

பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு ராஜேந்திரன் அவர்கள் பல கோரிக்கைகள் தங்களது தொகுதிக்கு நிறைவேற்ற வேண்டுமென்று பட்டியலிட்டு கொடுத்திருக்கிறார். அதையெல்லாம் அரசு பரிசீலித்து என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்படுமோ அந்தந்த திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இவ்வளவு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் இந்த அரசில் எந்த திட்டமும் நிறைவேற்றப்படவில்லை, இந்த ஆட்சி நடக்கிறதா, இல்லையா என்று சந்தேகம் என்று சொல்லுகின்றார்கள். உங்களுக்கு எந்த சந்தேகமும் தேவையில்லை, தெளிவாக பார்த்துக் கொள்ளலாம். மேடையிலே அறிவித்திருக்கிறோம். அம்மாவினுடைய அரசு என்னென்ன திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்று தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கிறோம், அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள், மக்கள் அம்மா பக்கம் இருக்கின்றார்கள், அம்மாவினுடைய அரசு பக்கம் இருக்கின்றார்கள். ஆகவே, அம்மாவினுடைய அரசு தொடர்ந்து மக்கள் பணியாற்றும் என்பதை திட்டவட்டமாக இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கும், அதற்கு துணை நின்ற மாவட்ட அமைச்சர் மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்

இந்த விழாவை சிறப்பாக
ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு
எனது மனமார்ந்த பாராட்டுகளை
தெரிவித்துக் கொண்டு
இந்த அரசு உங்களின் சேவகனாக
தொடர்ந்து பணியாற்றும் என்பதை
தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நேற்றும் நமதே!   இன்றும் நமதே!  நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி!
வணக்கம்!

******

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**